பக்கங்கள்:-14

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 28 | ஞாயிற்றுக்கிழமை | 13.08.2023 | அதிர்வு 12 |
| --- | --- | --- | --- | --- | --- |

## பட்டதாரியானார் ரஞ்சன் ராமநாயக்க



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க தனது பட்டப் 02

# ரணிலுடன் கைகோர்க்குமாறு தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு

## பிரதமர் தினேஷ் குணவர்த்தனா விடுக்கின்றார்



கொழும்பு, ஓகஸ்ட் 13

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ்க் கட்சிகளும் கைகோர்த்துச் செயற்பட முன்வர வேண்டும்."

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் பியுரதமர் தினேஷ் குணவர்த்தன. 02

## நாணய நிதியத்துடன் மீளாய்வு செப்டெம்பரில் 8 நாள்களுக்கு

### அதன் பின் ரூ.11,200 கோடி கடன் கிடைக்கும்



சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் முதலாவது மீளாய்வை செப்டெம்பர் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். மேலும், இந்த மீளாய்வின் பின்னர் இரண்டாவது கடன் தவணையை சர்வதேச நாணய நிதியத்திடம் 02

## 'சனல் ஐ' சேவை 'லைகா'வின் வசம்




இலங்கைத் தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான "சனல் ஐ" 02

## இளைஞர்களின் ஹீரோயிஸமும் விபத்துகள் அதிகரிக்கக் காரணம்

### பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆதங்கம்

– எஸ். நிதர்ஷன் –

வடக்கு மாகாணத்தில் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு இளைஞர்களின் ஹீரோயிஸ நடவடிக்கைகளும் காரணமெனச் சுட்டிக்காட்டியுள்ள மாகாண சுகாதார பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஒருநாளைக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் மட்டும் 120 பேர் காயங்களுடன் அனுமதிக்கப்படுகின்றனர் எனவும் ஒருவருக்கு ஐந்து முதல் பத்து லட்சம் ரூபா 04

## நேருக்கு நேர் மோதிய இரு தனியார் பஸ்கள்!

### ஏழு பேருக்குப் படுகாயம்



பதுளை – கொழும்பு பிரதான வீதியின் எல்ல ஹல்பே பகுதியில் நேற்று மாலை 02

## தெற்கு ஆழ்கடலில் தீப்பிடித்த படகிலிருந்த 7 மீனவரும் மீட்பு



இலங்கைக்குத் தெற்கு சுமார் 58 கடல் மைல் தொலைவில் ஆழ்கடல் பகுதியில் பல நாள் மீன்பிடி படகில் மீன்பிடியில் ஈடுபட்டு கொண்டிருந்த 7 மீனவர்களை படகில் தீப்பிடித்தை அடுத்து இலங்கைக் கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

இலங்கை கடற்படையினரால் நாடளாவிய ரீதியில் உள்ள கடற்பகுதிகளில் 02

## இரகசியம்



நேற்று சமூக ஊடகங்களில் வெளியான ஒரு காணொலிச் செய்திப் படத்தை பார்த்தேன். பார்த்ததும் 'எங்க வீட்டு ராஜாவுக்கு இளமை திரும்புது....!' என்ற 'கிரகப்பிரவேசம்' படத்தின் பாடல்தான் நினைவுக்கு வந்தது. 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மிகவும் தளர்ந்து, அமைதியாக, பெரும்பாலும் கதிரையில் அமர்ந்து, அடங்கி இருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதற்கு மாறாகத் துள்ளிக் குதித்துப் பொடியன் போல, மென் பந்து கிரிக்கெட் அடிக்கும் செய்திப் படம்தான் அது.

அவரது மொட்டுக் கட்சியின் எம்.பிக்கள் – மகன் நாமல் ராஜபக்ஷ உட்பட – நுவரெலியாவில் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று கிரிக்கெட் விளையாடும் காட்சி அந்தக் காணொலியில் இடம் பெற்றிருந்தது.

இப்போதெல்லாம் வழக்கமாக வீட்டுக்குள்ளும் சரி, வெளியிலும் சரி, மஹிந்தர் நடந்து வரும்போது அவருக்குப் பக்கத்தில் எப்போதும் இரண்டு உதவியாளர்கள் – மெய்க்காவலர்கள் – நெருக்கமாகவே கூட வருவார்கள். அவர் தடுமாறினால் அவரைக் கைத்தாங்கலாகப் பற்றுவதற்கு.

அவரது வாகுவான உடல் நிறைய நீண்ட நேரம் தாங்கி நிற்கும் அளவுக்கு கால்கள் போதிய வலிமை கொண்டிருக்கவில்லை என்று ஒரு பேச்சு உண்டு.

ஆனால் நேற்றைய காணொலியில் நிலைமை அப்படி அல்ல. பவிலியனிலிருந்து ஆடுகளம் இருந்த நடு மைதானம் வரை ஏனையோருடன் சேர்ந்து வேகமாக அவரும் நடந்து வருகிறார். தனித்து நின்று துடுப்பு மட்டையைப் பிடித்துச் சுழற்றிச் துடுப்பாடுகின்றார். அந்த வயதில் அப்படித் துடுப்பாட – பந்து வீச்சுக்கு ஏற்ப மட்டையை அசைத்துச் செயல்பட – ஆறேழு பந்துவீச்சுகளுக்கு தொடர்ந்து துடுப்பெடுத்தாட – அவரால் முடிகிறது என்றால் ஓரளவுக்கு அவர் தேறி விட்டார் என்பதுதான் அர்த்தம்.

இன்னொரு தேர்தல் காலத்துக்கு தெற்கில் பிரசார வியூகத்தின் முன்னணியில் நிறுத்தப்படக்கூடிய இமேஜ்'ம் உடல்வாகும் செல்வாக்கும் இன்னமும் அவருக்கு இருக்கின்றன என்பதை நேற்றைய காணொலி வெளிப்படுத்துகின்றது.

நமது ஊர்களில் பேச்சு வழக்கு ஒன்று உண்டு. களைத்து, தளர்ந்து, சோர்ந்து, சுருண்டு, படுத்து விட்டவருக்கு ஒரு 'பி -12 இன்ஜெக்ஷன்' கொடுத்தால் நிமிர்ந்து எழுந்து விடுவார் என்று கூறுவார்கள். அது ஒரு விட்டமின் ஊசி. அப்படி ஏதும் மாய்மாலம் செய்து கொண்டுதான் மைதானக் களத்துக்குள் குதித்திருப்பாரோ...?

எது, எப்படி என்றாலும், அரசியலில் இன்னொரு ரவுண்ட் ஆட்டத்துக்கு மஹிந்தரை மீளவும் முன்னிறுத்தும் நம்பிக்கை மொட்டு கட்சிக்கு நிச்சயம் வந்திருக்கும் என்பது உறுதி.

## பட்டதாரியானார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படிப்பை நிறைவு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஞ்சன் ராமநாயக்க 2019 இல் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்.

இதனை தொடர்ந்து பின்னர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இளைஞர் மற்றும் சமூக அபிவிருத்தி பட்டப்படிப்பைப் பயின்று வந்தார்.

இந்நிலையில், அவர், தனது பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்துள்ளார் என்ற தகவல் அவரது முகப் புத்தகத்தில் வெளியாகியுள்ளது.

## தெற்கு ஆழ்கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளப்படும் விசேட ரோந்து நடவடிக்கைகளின் போதே இந்த மீனவர்கள் மீட்டுக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் அனைவரும் நேற்று சனிக்கிழமை காலை காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த ஏழு மீனவர்களும் "ருஹுனு குமாரி – 6 " எனும் பல நாள் மீன்பிடி இழுவை படகில் கடந்த 08 ஆம் திகதி வென்னப்புவவிலிருந்து தொழில் நிமித்தம் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இலங்கையின் மேற்கு கடற்பகுதியில் காலி கடல் பகுதியில் இருந்து சுமார் 107 கிலோமீட்டர் தொலைவில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது படகு தீப்பிடித்துள்ளது.

இந்த அனர்த்தம் தொடர்பில் அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் மூலம் கடற்படை தலைமையகத்தில் அமைந்துள்ள கொழும்பு, கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் விரைந்து நடவடிக்கை எடுத்த கடற்படையினர் கடற்படைக்கு சொந்தமான கப்பல் மூலம் பாதிக்கப்பட்ட மீனவர்களை தீப்பிடித்த படகிலிருந்து பத்திரமாக இடமாற்றம் செய்து, காலி துறைமுகத்திற்கு அழைத்து வந்துள்ளனர்.

மேலும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முதலுதவி சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுள்ளன.

## ரணிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

"இது விவாதம் செய்யும் காலம் அல்ல. நாட்டுக்காக – மக்களுக்காக – கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் காலமே இது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றியுள்ளார். இந்த உரை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த உரை.

எனவே, அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி முன்னெடுக்கவுள்ள சகல வேலைத்திட்டங்களுக்கும் தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும். அப்போதுதான் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை நாம் விரைந்து காண முடியும். – என்றார்.

## நாணய நிதியத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில் –

"செப்டம்பர் 11 முதல் 19 வரை 08 நாள்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான மீளாய்வு உள்ளது.மத்திய வங்கி, நிதியமைச்சகம் மற்றும் நிதியமைச்சர் ஆகியோர் அடங்கிய மீளாய்வாக இது அமையும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துடன் 09 முன் ஒப்பந்தங்களை நாங்கள் செய்துள்ளோம்.நாங்கள் இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக எதிர்கொண்டோம்.

2.9 பில்லியன் டொலர்களுக்கு இந்த பூர்வாங்க ஒப்பந்தங்களை செய்தோம்.

இது 2027 வரை 08 தவணைகளில் பெறப்படும். இப்போது முதல் தவணை கிடைத்துள்ளது.

இரண்டாவது தவணை கிட்டத்தட்ட 35 கோடிடொலர்கள் (சுமார் 11 ஆயிரத்து 200 கோடி ரூபா) ஆகும்.செப்டம்பரில் பரிசீலனைக்குப் பிறகு அதைப் பெற முடியும் என்று நான் நம்புகிறேன்" என்றார்.

## 'சனல் ஐ' சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேவை லைகா குழுமத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

அதற்காக மாதாந்தம் இரண்டரைக் கோடி ரூபா இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட உள்ளது.

தொடர் நஷ்டம் காரணமாக "சனல் ஐ" சேவையை தனியார் முதலீட்டாளரிடம் ஒப்படைக்க வெகுஜன ஊடக அமைச்சு முன்மொழிந்திருந்தது.

கிடைத்த அனுமதியின் அடிப்படையில், இந்த குத்தகை ஒப்பந்தம் கையெழுத்தானது.

## நேருக்கு நேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற விபத்தில் 7 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதியுள்ளன.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் காயமடைந்த நான்கு பெண்கள், மூன்றரை வயது சிறுமி மற்றும் இரண்டு ஆண்கள், தெமோதர பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய இரண்டு பஸ்களின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தாங்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழரசின் சமஷ்டிப் பிடி!

*இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இது போதாத காலம் தான். தான் சேர்ந்து கூட்டமைத்துத் தூக்கி விட்ட கட்சிகள் எல்லாம் காலை வாரி, தன்னை நட்டாற்றில் விட்ட நிலையில், தமிழ்த் தேசியப் பரப்பில் தனித்து நீச்சலடிக்க வேண்டிய கட்டாயம் அதற்கு. மூத்த தலைவர்கள் தளர்ந்து போயுள்ள நிலையில், அடுத்த தலைமைத்துவம் குறித்து இன்னமும் தீர்க்கமும் இல்லை, தீர்மானமும் இல்லை.*

*இவற்றுக்கு மத்தியிலும் தமது கட்சியின் தனித்துவத்தைத் தொடர்ந்து பேணி, முக்கியத்துவத்தை நிலைநிறுத்த வேண்டிய கட்டாயம் அதன் மூத்த தலைவர் சம்பந்தன், கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் அடுத்த மட்டத் தலைவர்களுக்கு.*

*உட்கட்சிப் பூசல், பிளவு, இழுபறி, கால்வாரல்கள், கட்சியின் நிர்வாகக் கட்டமைப்பில் சோர்வு என்பவை ஒரு புறம் என்றால், மறுபுறம் வெளி அழுத்தங்கள் அதைவிட அதிகம்.*

*ஊரோடு சேர்ந்து ஓடுவதா அல்லது தனித்துவ இயல்பை உறுதியுடன் பற்றி நிற்பதா என்ற நெருக்கடி - இக்கட்டு - அக்கட்சிக்கு இப்போது.*

*13 ஆம் திருத்தத்தைப் பற்றி நின்றபடி, அது தன் காலாதிகால வற்புறுத்தலான சமஷ்டியை மெல்லக் கவனியாத மாதிரி கைவிடுவதா என்ற கேள்வி அரசியல் நிர்ப்பந்தங்களினால் அக்கட்சித் தலைமை மீது சுமத்தப்பட்டிருப்பதுதான் இப்போதைய நிலைமை.*

*தலைவர்கள் தளர்ந்திருந்தாலும் - அரசியல் செயற்பாடுகளில் தடுமாற்றம் இருந்தாலும் - தன் செல்நெறியில் கட்சி உறுதியாக இருப்பதாகவே இப்போது வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*ஜனாதிபதி ரணிலின் 13 ஆம் திருத்தம் பற்றிய அறிவிப்பு -*

*13 இன் அடிப்படையில் தீர்வு காண, தோன்றாய் துணையாய் அழுத்தம் தரும் புதுடில்லி -*

*ஆரம்பத்தில் தனி நாட்டுக் கோரிக்கையிலிருந்தும், இப்போது சமஷ்டி நிலைபாட்டில் இருந்தும், நழுவி நிற்கும் பழைய கூட்டமைப்புப் பங்காளிகள் -*

*- இப்படி பல்வேறு புள்ளி நிலைப்பாடுகளுக்கு மத்தியில் சிக்குண்டிருக்கும் தமிழரசு, தானும் 13 உடன் மண்டியிட்டு விடுவதா என்ற கேள்வி எழுந்துள்ள இந்த நிலையில்தான் சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து உறுதியான பிரதிபலிப்புகள் கிடைத்திருக்கின்றன.*

*'மழைக்கால இருட்டு என்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பார்கள். எந்த அழுத்தம் வரினும் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிடோம் என்ற நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை உறுதியாகப் பிரதிபலிக்க தமிழரசும் அதன் தலைவர் சம்பந்தனும் தீர்மானித்து விட்டனர் என்று நம்பகமாக அறிய வருகின்றது.*

*13 பற்றிய ஜனாதிபதியின் கருத்து கூறலுக்கு சம்பந்தனின் பதில் இரண்டொரு நாள்களில் போகின்றது.*

*"13 - அரசமைப்புச் சட்டத்தில் இருப்பது. அதை நீங்கள் நிறைவேற்ற சட்ட - தார்மீக - கடப்பாடு கொண்டுள்ளீர்கள். அதை நீங்கள் முழுமையாகச் செய்துதானாக வேண்டும். உடன் செய்யுங்கள். அதற்கு எங்கள் கருத்து அவசியம் இல்லை. அந்த முயற்சிக்கு நமது ஆதரவு, ஒத்துழைப்பு உண்டு. ஆனால் அர்த்தமுள்ள அதிகார பகிர்வும், இறுதித் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் மட்டும்தான் இருக்க முடியும்."- இப்படி ரணிலுக்கு தமிழரசின் பதில் மீண்டும் சமஷ்டியை உறுதிப்படுத்துவதாக அமையும் என்று தெரிகிறது.*

# நாளை முதல் வடக்கில் டெங்கு தடுப்பு வாரம்!

எதிர்வரும் 14 ஆம் திகதி (நாளை) தொடக்கம் 7 நாள்களுக்கு வடமாகாணத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இது குறித்து மேலும் கூறியவை வருமாறு:-

எமது பகுதிகளில் டெங்கின் தாக்கம் குறைவாக காணப்பட்டாலும் எதிர்வரும் ஒரு மாதத்தில் மழை வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே டெங்கின் தாக்கம் அதிகரிக்க கூடும் என எச்சரிக்கப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே ஜனாதிபதி இலங்கை முழுவதும் டெங்கு கட்டுப்பாட்டுக்காக விசேட குழுக்களை அமைத்து செயல்படும்படி கேட்டிருக்கின்றார். அதன் பிரகாரம் மாகாண மட்டக் குழுக்கள், மாவட்ட மட்டக் குழுக்கள் மற்றும் பிரதேச, கிராம மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குழுக்கள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது. வடமகாணத்திலும் இதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர் பிரதம செயலாளர் மற்றும் சுகாதார செயலாளரோடு மாகாண மட்டக் கலந்துரையாடல் நடைபெற்று 14 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரத்துக்கு வடமாகாணத்தின் சகல இடங்களிலும் டெங்கு விழிப்புணர்வு வாரம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நாளை தொடக்கம் 7 நாள்களுக்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் சகலரும் ஈடுபட வேண்டும்.

குறிப்பாக இந்த வருடம் இலங்கை முழுவதும் ஐந்தரை மாதங்களில் 45,612 பேருக்கு டெங்கு நோய் ஏற்பட்டிருக்கிறது. இதில் யாழ் மாவட்டத்தில் 1,472 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 76 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 103 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 100 பேருக்கும் டெங்கு இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே யாழ் மாவட்டத்தில் அதிகளவிலானோர் டெங்கு நோய்க்கு உள்ளாகி இருக்கின்றார்கள். குறிப்பாக யாழ் மாவட்டத்தில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, நல்லூர் மற்றும் நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிக எண்ணிக்கையானோர் டெங்கு நோய்க்கு உட்பட்டிருக்கின்றார்கள்.

வடமாகாணத்தில் இருக்கின்ற சகல பகுதிகளிலும் டெங்கு நோய் தொற்றும் அபாயம் காணப்படுகிறது. பருவப்பெயர்ச்சி மழையில் டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் பெருகும் அபாயம் காணப்படுகிறது.

ஆகவே சகல தரப்பினரும் டெங்கு நோயை இல்லாத ஒழிப்பதற்கு முற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குறிப்பாக அந்தந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற பாடசாலை வளாகமாக இருக்கலாம், அரசாங்க சேவை நிலையமாக இருக்கலாம், அல்லது தனியார் நிலையமாக இருக்கலாம். எல்லா இடங்களிலும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதாவது டெங்கு அபாயத்தை விளைவிக்கக் கூடிய நீர் தேங்கி நிற்கக்கூடிய - பொருள்கள் கிரமமாக சேகரிக்கப்பட்டு அந்தந்தப் பிரிவின் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற பிரதேச சபைகளின் ஊடாக அகற்றப்பட்டால் டெங்கு நோயை எமது பகுதிகளில் கட்டுப்படுத்த முடியும்.

மாகாண மட்டத்தில் அல்லது மாவட்ட மட்டத்தில் இருக்கின்ற சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள் இந்த விடயங்களை வினைத்திறனோடு ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவார்கள்.

ஆகவே அவர்கள் பகுதிகளுக்கு வருகின்ற போது அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் அனைவரும் பொறுப்போடு டெங்கு நோய் பரவும் அபாயத்தை இல்லாத ஒழிக்க வேண்டும்.

இது தனியே சுகாதாரத் திணைக்களத்துக்கான வேலை மாத்திரமல்ல, தனியே நகர சபைகள், பிரதேச சபைகளுக்கான வேலைகள் மாத்திரமல்ல. அனைத்துத் தரப்பினரும் சேர்ந்து இந்த டெங்கு நோய் பரவும் அபாயத்தை இல்லாது ஒழிக்க வேண்டும். - என தெரிவித்தார்.

# வைத்தியர்கள் வெளியேறுகின்றமையால் வடக்கிலும் மருத்துவ சேவைகள் பாதிப்பு



– எஸ்.நிதர்ஷன் –

வடக்கு மாகாணத்திலுள்ள வைத்திய நிபுணர்கள் பலர் வெளிநாடு சென்றுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ் பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் சுகாதார வைத்திசாலைகளிலும் கணிசமான அளவு வைத்தியர்கள் கடமையில் இருக்கின்றார்கள்.

இருப்பினும் சில நேரங்களில் குறிப்பாக விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்களின் தேவைப்பாடு அவசியமாகின்றது.

குறிப்பாக விசேட வைத்திய நிபுணர்கள் வெளிநாட்டு பயிற்சிக்கு செல்லுகின்றமையாலும் அதேபோன்று இன்னும் சிலர் தொழில் வாய்ப்பு நிமித்தம் திடீரென்று வெளிநாட்டுக்கு செல்லுகின்றமை போன்றவற்றால் அந்தந்தப் பகுதிகளில் திடீரென வெற்றிடம் ஏற்படுகின்றது.

இதனால் கூடுதலாக முல்லைத்தீவு மற்றும் மன்னர் பொது வைத்தியசாலைகள் அதிகளவு பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

அது மாத்திரமில்லாமல் சில ஆதார வைத்தியசாலைகளும் பொருத்தமான வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

இது சம்பந்தமாக மத்திய சுகாதார அமைச்சிலும் கலந்துரையாடி இருக்கிறோம். இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. – என்று கூறியுள்ளார்.

---

## இளைஞர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரையில் சிகிச்சைக்குச் செலவாகு வதாகவும் தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் ஒரு நாளைக்கு 120 பேர் விபத்துகளினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றார்கள். இதில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு நேரடியாக வருகின்றவர்களும் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வருபவர்களும் அடங்குவர்.

இதில் பத்து தொடக்கம் 15க்கும் மேற்பட்டவர்கள் எலும்பு முறிவடைந்து சிகிச்சைக்காக வருகின்றார்கள். சிறிய முறிவு, பெரிய முறிவு என வருகின்றவர்களை எலும்பு முறிவு சத்திர சிகிச்சை நிலையத்திற்கு எடுத்துத்தான் சத்திர சிகிச்சை நிபுணர் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளுவார்.

இது ஒரு சிக்கலான சிகிச்சைதான். ஏனெனில் எலும்புகள் முறிவடைந்து வருகின்ற போது அங்கு எலும்புகள் பொருத்தப்பட்டு அதற்கு உள்ளேயும் வெளியேயும் தகடுகள் வைக்கப்பட்டு அந்த எலும்புப் பகுதிகள் நேராக்கப்பட்டு மிகப் பெரிய சிகிச்சை வழங்கப்படுகிறது.

அது ஒரு சிக்கலான ஒரு முறை தான். அதற்கு பெருமளவில் செலவுகள் ஆகும். அதில் சிலவற்றை வெளியில் வாங்கித்தான் நாம் அதனை செய்ய வேண்டியதாக இருக்கின்றது. தற்போதைய நிலையில் மத்திய மருந்தகத்தினால் வழங்கப்படுகின்ற அந்த அளவுகளும் குறைவாகவே காணப்படுகின்றன.

ஆனாலும் சிலர் அவற்றை வெளியில் வாங்கி வருகின்ற போதும் பொருத்தப்படுகின்றது. இது ஒரு சிக்கலான சத்திர சிகிச்சை. இது ஒரே நாளில் பலருக்கு செய்து விட முடியாது. குறிப்பிட்ட சிலருக்கு தான் இந்த சத்திர சிகிச்சையைச் செய்ய முடியும்.

சுமார் மூன்று மாத காலம் கூட காத்திருந்துதான் இந்த சிகிச்சையை செய்ய வேண்டி இருக்கின்றது. ஒன்று அவர்கள் காத்திருந்து சிகிச்சை பெற வேண்டும். மற்றொன்று எமது வைத்தியசாலையில் போதிய உபகரணங்கள் அந்த சிகிச்சைக்கு இல்லாத படியால் அதனை வெளியில் வாங்கித் தர வேண்டும். ஆனாலும் சில நன்கொடையாளர்கள் ஊடாகவும் அதை நாம் பெற்று சிகிச்சை வழங்குகின்றோம்.

இதை குறிப்பாக ஒரு சிக்கலான எலும்பு முறிவாயின் அதற்கு ஒரு கணக்கு போட்டு பார்க்கின்றபோது 5 லட்சம் தொடக்கம் 10 லட்சம் ரூபா இடையில் செலவாகின்றது. இதில் உபகரணம், அங்கே பாவிக்கப்படுகின்ற மருந்து, வைத்தியசாலையில் தங்கி இருக்கின்ற செலவு, நிபுணத்துவ செலவு மற்றும் அங்கே அந்த சிகிச்சை பெற வருகின்றதும் உள்ளே தங்கி இருக்கின்றதுமான செலவுகள் என சிலவற்றைப் பார்க்கின்ற போது இவ்வளவு செலவுகள் ஏற்படுகின்றன.

இளைஞர்கள் மற்றும் பாதைகளிலே பயணிக்கின்றவர்கள் விபத்தில் சிக்கிக் கொள்ளாமல் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அது மிகவும் முக்கியமானது. அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வீதி ஒழுங்குகள், பயணிக்கின்ற வேகம் என்பவற்றை அவர்கள் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

புதிய உந்துருளி ஒன்றை வாங்குபவர் அநேகமாக சில நாள்களில் விபத்துகளில் மாட்டிக் கொள்வர். இது தவிர பல்வேறு மனநெருக்கடி உள்ளவர்கள், அவர்கள் வேறு எண்ணங்கள், சிந்தனைகளில் இருக்கின்ற போது அவர்கள் பயணத்தை பற்றி கவனத்தில் கொள்வதில்லை. அதுவும் மிகவும் முக்கியம்.

குறிப்பாக கடமைக்கு செல்கின்றவர், அதிலும் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு ஏற்றிச் செல்கின்றவர்கள் விரைவாக செல்ல வேண்டும், குறித்த நேரத்தை தான் அடைய வேண்டும் என்ற காரணத்துக்காக வீதிகளில் விரைவாக செல்கின்றமை அவதானிக்கப்படுகின்றது. அதனை அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்னும் ஒன்று வீதிகளிலே பலர் ஹீரோயிஸம் காட்டுகின்றார்கள். விரைவாகப்பயணிக்க வேண்டும் என்ற ஆசையும், மற்றவர்களுக்கு விரைவாக பயணிப்பதாகக் காட்ட வேண்டும் என்ற எண்ணமும். அந்த ஆசையில் அவர்கள் ஹீரோயிஸம் காட்டுகின்றனர். அவ்வாறு காட்டுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதுவும் மிகவும் முக்கியமான விடயம்.

நமது பகுதிகளில் தவிர்க்கப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. நாங்கள் ஏற்கனவே கூறியது ஒன்று

மருந்து மற்றும் மருத்துவ சேவைகளுக்குத் தட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஆகவே தவிர்க்கப்பட வேண்டியதாக இருக்கின்ற பல விடயங்களை நிச்சயம் தவிர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானது.

சச்சரவுகள், சண்டைகள், வாள்வெட்டுகள் போன்றவற்றை நிச்சயம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இப்போது ஆட்கொலைகளும் அதிகரித்த நிலை காணப்படுகிறது. இதில் மிக முக்கியமாக அந்தப் பகுதிகளில் இருக்கின்ற பெரியவர்கள் பொது அமைப்புகள் அவர்களுக்கு நீதியையும் ஒழுங்குகளையும் அடிக்கடி நினைவுபடுத்த வேண்டும்.

தவிர்க்கப்பட வேண்டிய விபத்துகளையும் உயிரிழப்புக்களையும் தவிர்க்க வேண்டும். மக்கள் மத்தியில் – சமுதாயம் மத்தியில் – விழிப்புணர்வை ஏற்படுத்தி விபத்துக்களைக் கட்டாயம் குறைக்க வேண்டும். – என்றார்.

# தலைமன்னாரில் ஆரம்பமான மலையக எழுச்சி நடைபவனி மாத்தளையில் நேற்று நிறைவு




1823ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் மலையகத்தில் உள்ள தோட்டங்களில் வேலை செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முதல் தொகுதி மக்கள் பயணித்த பாதையை மீட்டெடுக்கும் – மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தும் – மலைய எழுச்சி பேரணி நேற்று சனிக்கிழமை மாத்தளையில் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது.

தலைமன்னார் முதல் மாத்தளை வரையான மலையக எழுச்சிப் பயணத்தின் நிறைவு நாளான நேற்று சனிக்கிழமை பிற்பகல் மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவிலான பேரணி மாத்தளையை அடைந்தது.

" மலையகம் – 200"ஐ முன்னிட்டு கடந்த 16 நாள்களாக இடம்பெற்றுவந்த மலையக எழுச்சி நடைபவனி நேற்று மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தை அடைந்ததோடு நிறைவுபெற்றது.

அதனைத் தொடர்ந்து, பயணத்தின் இலக்கு, மலையக மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையிலான நடைபவனி நிறைவு நிகழ்வு மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகியது.

மேலும், மலையக மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மாத்தளைப் பிரகடனம் அறிவிக்கப்பட்டது.

"வேர்களை மீட்டு உரிமை வென்றிட" என்கிற தொனிப்பொருளில் இந்த நடைபவனி நிகழ்வு கடந்த ஜூலை 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் ஆரம்பமானது.

தலைமன்னார் புனித லோரன்ஸ் தேவாலயத்தில் கலை நிகழ்வுகள் மற்றும் நினைவுத்தூபி அஞ்சலி இடம்பெற்றதோடு, மறுநாள் 29ஆம் திகதி சனிக்கிழமை தேவாலய வளாகத்தில் நடைபவனி புறப்பட தொடங்கியது.

இந்த 16 நாள் நடைபவனி நிகழ்வில் பல பிரதேசங்களின் வழியாக மலையக மக்கள் பேரணியினர் பயணித்தனர். அவர்கள் செல்கிற இடங்களில் அந்தந்த பகுதிகளி வசிக்கும் மக்கள் மலையக மக்களின் நடைபவனிக்கும் அவர்களது கோரிக்கைகளுக்கும் முழு ஆதரவை வழங்கியிருந்தனர்.

சர்வ மத தலைவர்களும் சமூக செயற்பாட்டாளர்களும் அந்தந்தப் பிரதேசங்களில் இயங்கும் பல அமைப்புகளும் பொது மக்களும் மலையக பேரணியினரை வரவேற்று உபசரித்து ஒத்துழைத்திருந்தனர். பலர் இந்த நடைபவனியில் இணைந்து நடந்தனர். பல இடங்களில் வெவ்வேறு அணியினர் போராட்டங்களையும் தனித்தனியான ஊர்வலங்களையும் நடத்தியிருந்தனர்.

# பொருளாதார பிரச்சினைகளினால் மனநல நோய்ப் பாதிப்பு அதிகரிப்பு



நாட்டில் மனநல நோயாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக காலி, கராப்பிட்டிய போதானா வைத்தியசாலையின் விசேட மனநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார பிரச்சினையினால் ஏற்பட்டுள்ள மனநல பிரச்சினைக்கு சிகிச்சை பெறும் நோக்கில் மனநலம் பாதிப்பு தொடர்பான வைத்தியர்களைச் சந்திக்க வருபவர்களின் எண்ணிக்கையே இவ்வாறு அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பொருளாதார பிரச்சினை மற்றும் எதிர்காலம் தொடர்பான உத்தரவாதமின்மை போன்ற காரணங்களினாலேயே மனநல பாதிப்பு அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கீரிமலைக் கேணி ஆக்கிரமிப்பு பெரும் அடாத்து நடவடிக்கை!

## அகில இலங்கை இந்து மாமன்றம் கடும் கண்டனம்



தொல்லியல் திணைக்களம் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை கேணியையும் அடாத்தாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சைவ ஆலயங்களை தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்த நினைப்பது கண்டிக்கத்தக்க விடயமென்றும் அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சைவ ஆலயங்களை மீதான தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு முயற்சியால் சைவ மக்கள் தமது அடையாளங்களை ஒன்றன் பின் ஒன்றாக இழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இது கவலைக்குரியதும் கண்டிக்கப்பட வேண்டியதுமான விடயமென அந்த அறிக்கையில் அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் முளையிலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் அகில இலங்கை இந்து மாமன்றம் வலியுறுத்தியுள்ளது.

நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக வலி வடக்கு பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வரும் - ஈழத்து பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள இந்தக் கேணிக்கு தமது நீத்த உறவினர்களின் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற வெளிநாடுகளிலிருந்தும் சைவ மக்கள் வருகின்றமை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொல்லியல் திணைக்களத்தின் சைவ மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தடுக்கப்பட வேண்டுமென அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சிறுபான்மை மக்களின் மத வழிபாடுகளை தடுக்கின்ற செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கம் சைவ ஆலயங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிப்பதன் மூலம் நாட்டிலுள்ள சைவத் தமிழ் மக்களின் நம்பிக்கையை இழந்து வருவதாக அகில இலங்கை இந்து மாமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

---

### உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் வழக்கு

# 23 எதிரிகளின் மீதும் மொத்தமாக 23 ஆயிரத்து 270 குற்றச்சாட்டுகள்

## வெள்ளியன்று மன்றில் வாசித்து முடிக்கப்பட்டன

கொழும்பு,ஓக.13

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக நௌஃபர் மௌலவி மற்றும் 23 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளின் வாசிப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிறைவடைந்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் தமித் தோட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையிலும், பிரதிவாதிகள் முன்னிலையிலும் குற்றச்சாட்டுகள் வாசிக்கப்பட்டன.

நௌபர் மௌலவி, சஜித் மௌலவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, ஆடம் லெப்பே, மொஹமட் சனஸ்தீன் மற்றும் மொஹமட் ரிஸ்வான் உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக, 2019 பயங்கரவாதத் தாக்குதலுக்கு உதவியமை, ஊக்குவித்தல் மற்றும் சதி செய்தல் உட்பட 23,270 குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலைக்கு சதி செய்தல், உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல் மற்றும் கொலை முயற்சி ஆகியவை அடங்கும்.

வழக்கின் அடுத்தகட்ட விசாரணை ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் பி.அம்பாவிலவுக்கு அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

# பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வால் அந்தப் பிரதேசத்துக்குப் பெரும் பாதிப்பு

## சுழற்சி முறையில் தொடரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றிய சமயம் சந்திரகுமார் விவரமாக எடுத்துரைப்பு







மக்களின் பூர்வீக வாழ்விடங்களை இல்லாதெழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற எந்த அபிவிருத்தி திட்டமும் தேவையற்ற ஒன்றே. அதனால் பன்னாட்டு நிறுவனங்கள் நன்மை பெறுமே தவிர அந்த மக்கள் வாழ்விழந்து போவார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக்

கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக வேரவில் பகுதியில் நேற்று பத்தாவது நாளாக தொடர்ந்தும் சுழற்சி முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற பொது மக்களுக்கு ஆதரவு தெரிவித்து அப்போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தே போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்க அவர் மேலும் தெரிவிக்கையில. –

பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராமத்தில் சீமெந்துத் தொழிற்சாலைக்கான மூலப் பொருளான சுண்ணக் கல் அகழ்வை மேற்கொள்ளவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நிறைவுற்றுள்ளன. மேற்படி நிறுவனம் ஒன்று இந்தக் கடற்கரை கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 300 மீற்றர் ஆழம் வரை சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளவுள்ளது. இது மிகப்பெரும் ஆபத்தை வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு கிராம மக்களுக்கு உடனடியாகவும் ஏனைய அயல் கிராம மக்களுக்கு படிப்படியாகவும் ஏற்படுத்த போகிறது. பொது மக்கள் தங்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை உருவாகும்.

ஏனெனில் இந்த அகழ்வு நடந்தால் கடல் நீர் நிலத்தடி நீரில் கலந்து இந்தப் பிரதேசத்தில் உள்ள நன்னீர் உவர் நீராக மாற்றமடையும். பின்னர் நிலம் உவராக மாறும். இதன்போது மக்கள் அங்கு வசிக்க முடியாத நிலைமை உருவாகும். மேலும் தற்போது கிராஞ்சி குடி தண்ணீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இந்தப் பிரசேத்தின் நிலத்தடி நீரை மூலமாகக் கொண்டே நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. சுண்ணக்கல் அகழ்வு காரணமாக இந்தநிலத்தடி நீர் வளம் பாதிக்கப்பட்டு இந்தக் குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்படும். தொழிற்சாலை கழிவுகள், தூசுகளால் பொது மக்களுக்குப் பாதிப்பும் நோய்த் தொற்றுக்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இப்படி ஏராளமான பாதிப்புக்கள் ஏற்படும். இந்தச் செயற்பாட்டால் ஏற்படும் நன்மைகளை விட பாதிப்புக்களே அதிகமாக இருக்கும்.

ஆகவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை எமது சமத்துவக் கட்சியும் அந்த மக்களுடன் இணைந்து எதிர்க்கிறது என்பதனை இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். – என்றார்.

# போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு வைத்திய சிகிச்சை வழங்க வடக்கில் நிலையம்!

## நடவடிக்கை எடுக்கப்படுவதாக பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்

– எஸ்.நிதர்ஷன் –

வடக்கில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை வைத்துப் பராமரிப்பதற்கு சிகிச்சை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ் பண்ணையில் அமைந்துள்ள மாகாண சுகாதார திணைக்களத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஒரு வருடமாக வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. ஆனால் இப்போது போதைப் பொருள் சம்பந்தமாக ஓரளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகின்ற போது அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

இருப்பினும் முற்று முழுதாக போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை நீண்ட காலமாக வைத்து பராமரிக்கும் நிலையம் வடபகுதியில் காணப்படவில்லை. அவ்வாறான ஒரு விசேட நிலையத்தை அமைப்பதாயின் அதற்கு பல்வேறுபட்ட வசதிகள் தேவையாக இருக்கின்றன.

இந் நிலையில் இவ்வாறானதொரு நிலையத்தை வடக்கில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரும் முயற்சிகளை எடுத்திருக்கின்றார்.

அதேநேரத்தில் புதிதாக ஒருவர் போதை பொருளுக்கு அடிமையாகாமல் குடும்ப உறுப்பினர்களும் சமூகத்தவர்களும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது மிகவும் அவசியம். – என்றார்.

# இந்தியா - சீன இராணுவ தளபதிகளுக்கிடையில் 19 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நாளை!



இந்தியா மற்றும் சீன இராணுவ தளபதிகளுக்கிடையில் 19 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நாளை இடம் பெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் இந்திய குழுவுக்கு கெமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் ரஷிம் பாலி தலைமை தாங்குகிறார்.

அத்துடன், வெளியுறவுத்துறை அமைச்சக உயர் அதிகாரிகள் மற்றும் இந்தோ தீபெத் எல்லை பாதுகாப்பு படை அதிகாரிகளும், சீனா தரப்பில் தெற்கு சின்ஜியாங் இராணுவ அதிகாரிகள் தலைமையிலான குழுவினரும் பங்கேற்க உள்ளனர்.

இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் 4 தடவைகள் படை குறைப்பிற்கு சீனா ஒப்புதல் அளித்துள்ளது என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், தற்போதும் 60 ஆயிரத் திற்கும் மேற்பட்ட சீன ராணுவ வீரர்கள் எல்லை கோடு அருகே குவிக்கப் பட்டுள்ளனர்.

எனவே. 19 ஆவது சுற்று பேச்சுவார்த் தையின் போது கிழக்கு லடாக் பகுதியில் சீன படைகளை குறைக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்த உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

## ‘பழங்குடியின மக்களை நேசிக்கிறேன்’

பழங்குடியின மக்களை நான் நேசிக்கிறேன். அவர்களை சந்தித்தது இனிமையான தருணம் என காங்கிரஸ் முன்னாள் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தி மீண்டும் நாடாளு மன்ற உறுப்பினராக பதவி ஏற்ற பின்னர் முதல் முறையாக வயநாடு தொகுதிக்கு நேற்று செல்கிறார்.

டில்லியில் இருந்து விமானம் மூலம் கோவை சென்ற அவர், அங்கிருந்து வாகனத்தில் சென்று உதகை அருகே உள்ள எல்லநள்ளி பகுதியில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்றார். அங்கு விண்வெளி வீரர் ராகேஷ் சர்மாவை சந்தித்து, அவருடன் தேநீர் அருந்தினார்.

பின்னர் கூடலூர் செல்லும் வழியில் தோடர் பழங்குடியின மக்கள் வசிக்கும் முத்தநாடு மந்துக்கு சென்றார். அங்கு வந்த அவரை தோடரின மக்கள் தலைவர் மந்தேஷ்குட்டன், மாவட்ட ஊராட்சி தலைவர் மு.பொன்தோஸ், தமிழ்நாடு காங்கிரஸ் பழங்குடியினர் பிரிவு மாநில தலைவர் ப்ரியா நாஷ்மிகர் மற்றும் தோடரின மக்கள் தங்களது பாரம்பரிய சால்வை அணி வித்து வரவேற்றனர்.

அரை மணி நேரம் அங்கு செல விட்ட ராகுல் காந்தி, அங்கிருந்து வயநாடு புறப்படும் போது, அவரது பயணம் குறித்து கருத்து தெரிவிக்கை யில், நான் பழங்குடியின மக்களை நேசிக்கிறேன். அவர்களை சந்தித்தது இனிமையான தருணம் என்று தெரி வித்துள்ளார்.

## எதிர்க் கட்சிகளுக்குப் பயம்; கேலி செய்கிறார் பிரதமர் மோடி



நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சிகள் பயத்தில் வெளிநடப்பு செய்தன என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேற்கு வங்க பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்ற பா.ஜ.கவினர் மத்தியில் காணொலி வாயிலாக பிரதமர் மோடி நேற்று உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கை இல்லா பிரேரணையை நாம் தோற்கடித்தோம். கூடவே, அவர்களின் கேள்விகளுக்கு, தேசத்தில் எதிர்மறை எண்ணங்களை விதைத்து வந்தவர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுத்தோம். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலிருந்து பாதியிலேயே வெளிநடப்புச் செய்தனர். உண்மையில் அவர்கள் நம்பிக்கை இல்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பங்கேற்க பயந்துபோய் வெளிநடப்பு செய்தனர் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது பிரதமர் மோடி இரண்டு மணி நேரத்துக்கும் மேல் நீண்ட உரையாற்றினார். அதில் 90 நிமிடங்கள் வரை பிரதமர் மோடி மணிப்பூர் விவகாரம் பற்றி எதுவுமே பேசவில்லை. இதனால், எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. அதன் பின்னர் பிரதமர் மோடி மணிப்பூர் பற்றி பேசினார். அதன் பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் நம்பிக்கை இல்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மேற்கு வங்கத்தில் உள்ளாட்சித் தேர்தலின்போது இடம்பெற்ற வன்முறைகள் குறித்தும் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியிருந்தார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மேற்கு வங்க உள்ளாட்சித் தேர்தலின் போது பா.ஜ.க. தொண்டர்களை திரிண மூல் காங்கிரஸ் கட்சியினர் தாக்கினர். வாக்குச்சாவடிகளை கைப்பற்றினர். தேர்தலில் போட்டியிட பா.ஜ.கவைச் சேர்ந்த ஒருவர் கூட வேட்புமனு தாக்கல் செய்யக் கூடாது என்ற எண்ணத்தோடு அவர்கள் நம் கட்சியினரை மிரட்டினர். இருந்தும் பா.ஜ.கவினர் களம் கண்டனர். அதனால் வன்முறையில் அவர்கள் இறங்கினர் என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# உக்ரைனின் 20 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது ரஷ்யா!

உக்ரைன் – ரஷ்ய போர் மீண்டும் தீவிரமடைந்து வரும் நிலையில் கிரிமியா அருகே 20 உக்ரைன் ட்ரோன்களை ரஷ்யா சுட்டு வீழ்த்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

உக்ரைன் கிரிமியா தீபகற்பம் அருகே ரஷ்யா தனது தாக்குதலை அதிகரித்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் உக்ரைனின் 20 ஆளில்லா விமானங்களை ரஷ்யா சுட்டு வீழ்த்தியுள்ளது.

14 ஆளில்லா விமானங்கள் வான் பாதுகாப்பு அமைப்புகளாலும், 6 எலக்ட்ரானிக் போர்களாலும் அழிக்கப்பட்டன என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் உயிர்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.



மாஸ்கோவிற்கு தென்மேற்கே சுமார் 150 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கலுகா பகுதியிலும் ஒரு ஆளில்லா விமானம் இடைமறிக்கப்பட்டது என ஆளுநர் விளாடிஸ்லாவ் ஷப்ஷா தெரிவித்துள்ளார்.

# ஹவாய் காட்டுத் தீ: 80 பேர் உயிரிழப்பு!



அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் காட்டு தீ பரவல் காரணமாக பலியானவர்களின் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், தீப்பரவலினால் ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர மவுயி தீவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்கரை நகரான லஹய்னாவின் 80 சதவீதமான பகுதிகள் தீயினால் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



கடந்த செவ்வாய் கிழமை ஆரம்பமான காட்டு தீயினை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தீயணைப்பு படையினர் முயன்று வருகின்றனர்.

குறித்த பிரதேசத்தில் கடுமையான புயல் வீசுவதனால் காட்டு தீ தொடர்ந்தும் புதிய பிரதேசங்களுக்கும் பரவி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஈபிள் கோபுரத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்!




பிரான்ஸில் ஈபிள் கோபுரத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த வெடிகுண்டு மிரட்டலை தொடர்ந்து வெடிகுண்டு தடுப்புப்பிரிவு மற்றும் பிரான்ஸ் பொலிஸார் அப்பகுதியை கண்காணித்து வருகின்றனர்.

இது போன்ற சூழ்நிலையில் இது நிலையான நடைமுறை, இருப்பினும், இது அரிதானது என்று ஈபிள் கோபுரத்தை இயக்கும் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.



# நாட்டின் விவசாயத்துறையில் புரட்சியை ஏற்படுத்தும் பணிகளைத் துரிதப்படுத்துக!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் மூலம் நாட்டின் விவசாயத் துறையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இதற்கென விவசாயம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயலணியொன்றை உருவாக்கவுள்ளார் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட, நீர்ப்பாசன, மாகாவலி அபிவிருத்தி அமைச்சுக்களை இணைத்து தனியார் துறையின் பங்கெடுப்புடன் மேற்படி செயலணியை நிறுவ எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

விவசாயத்துறை நவீனமயப்படுத்தல் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

விவசாய நவீன மயப்படுத்தலுக்கான செயலகமொன்றை ஸ்தாபிப்பதற்கான வரைவு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை இரு வாரங்களுக்குள் பெற்றுத்தருங்கள்.

தேவை ஏற்படுமாயின் அச்செயற்பாடுகளுக்காக நாடாளுமன்ற குழுவொன்றை நியமிக்க முடியும்.

விவசாயம் இந்த நாட்டு பொருளாதாரத்தின் பிரதான அங்கமாக காணப்படுகிறது. அதனை அமைச்சு அல்லது சில நிறுவனங்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது. அரச மற்றும் தனியார் துறைகள் உரிய ஒருங்கிணைப்புடன் விவசாயத்தை நவீனமயப்படுத்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல் பழமையான முறைமைகளுக்கு மாறாக புதிய முறையில் சிந்தித்து சிறந்த பிரதிபலன்களை அடையும்வகையில், விவசாயத்தைநவீனமயப்படுத்த வேண்டியது அவசியம்.

இதுவரையில் விவசாயததுக்கான நிதி ஒதுக்கீடுகள் மாத்திரமே இடம்பெற்றன. அதனால் நாட்டுக்கு எவ்வித பலன்களும் கிடைக்கவில்லை. உரிய முகாமைத்துவத்தின் கீழ் விவசாய திட்டமிடல்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விவசாய அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். 9 மாகாணங்களிலும் காணப்படும் வளங்களை அதற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும், அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, உரிய அமைச்சுகள் மற்றும் பல்கலைக் கழகங்கள், ஏனைய ஆய்வு நிறுவனங்களின் நிபுணத்துவ தெரிவுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அந்தந்த போகங்களுக்கு ஏற்ற நெல் வகைகளைப் பயிரிடுதல், குறித்த பயிர்கள் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடம் இருந்து அறிவைப் பெறுதல், தரமான விதைகளை கொள்முதல் செய்தல் ஆகிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். நாடு பூராகவும் உள்ள கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக சிறு விவசாயிகளுக்கு அவசியமான நவீன தொழில்நுட்ப அறிவை வழங்கும் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

அத்துடன், நவீன விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்யும் தாய்லாந்து போன்ற நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பிலும் ஆராயுங்கள்.

விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு, தனியார் துறை தொழில் முயற்சியாளர்களை உள்ளீர்ப்பதன் மூலம் அதிக நன்மைகளை பெற முடியும். நிலையான விவசாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.– என்றார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் உரிய பயிர்களை கிராமப்புற ரீதியில் ஊக்குவிக்க வேண்டும். புதிய தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்குத் தெளிவூட்டல் வேண்டும்.–என்றார்.

இந்த கலந்துரையாடலில் பங்கேற்ற அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளும் தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.



# பிளாஸ்டிக் கொண்டு வருவதை தடுக்க இதுவரை 7 வர்த்தமானிகள் வெளியீடு

## மனோபாவத்தில் மாற்றம் வந்தாலே இது சாத்தியம்

## என்கிறார் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

இலங்கைக்குள் பிளாஸ்டிக் கொண்டு வருவதை தடுக்கும் வகையில் இதுவரை 7 வர்த்தமானிகள் வெளியிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த நாட்டில் பிளாஸ்டிக் பொருள்களின் பாவனை இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை.

2018 ஆம் ஆண்டு முதல் பிளாஸ்டிக் பொருள்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய 812 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருள்களின் அளவு 2 பில்லியன் கிலோகிராம்.

இவ்வாறு நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் (11.08.2023) நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருள்களின் அளவு 2 பில்லியன் கிலோகிராம்.

அத்துடன், இலங்கைக்குள் பிளாஸ்டிக் கொண்டு வருவதை தடுக்கும் வகையில் இதுவரை 7 வர்த்தமானிகள் வெளியிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த நாட்டில் பிளாஸ்டிக் பொருள்களின் பாவனை இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை.

ஓரளவு படிப்படியாகக் குறைந்து வருகிறது. சட்டங்களை இயற்றுவதற்குப் பதிலாக மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக தான் பிளாஸ்டிக் பாவனையைக் குறைக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# அல்-குர்ஆனை ஓதி முடித்தவர்களுக்கு சான்றிதழ்









(நூருல் ஹுதா உமர்)

புதிய காத்தான்குடி அல்-அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயலின் கீழ் இயங்கும் குர்ஆன் மதரஸாவில் புனித அல்-குர்ஆனை ஓதி முடித்து பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அல்-அக்ஸா பெரிய பள்ளிவாயலின் தலைவர் கே.எல்.எம்.பரீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன், காத்தான்குடி நகரசபை முன்னாள் உறுப்பினர் முகம்மது ஜவாஹிர், குர்ஆன் மத்ரஸாக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் உறுப்பினர்கள், உலமாக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடமராட்சியிலிருந்து கடலுக்கு சென்ற மீனவரைக் காணவில்லை




கடந்த 4 ஆம் திகதி கடற்றொழிலுக்கெனசென்றவர்இதுவரைவீடுதிரும்பவில்லை என்று தெரிவித்து, அவரைக் கண்டுபிடித்துத் தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உதவ வேண்டும் எனக் காணாமல் போனவரின் தாயார் கண்ணீர் மல்கக்கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுத் தாம் நடாத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கோரினார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 4 ஆம் திகதி கடலுக்கென சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. அவரைக் கடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்ற நிலையில், கடத்தியவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரை நாகர்கோவில் பகுதியில் மடக்கி பிடித்த ஊரவர்கள், கடத்தல் தொடர்பில் அவர் ஒப்புக்கொண்ட நிலையில் அவரைப் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவித்துள்ள தாயார், மேலும் அவருடன் சென்ற ஒருவர் கஞ்சாக் கடத்தல் தொடர்பில் கைதாகி இருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது என்றார்.

தனது மகன் வீடு திரும்பாத நிலையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் எனவும்,பொலிஸாரும் அவரைத் தேடி வருகின்றனர் எனவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ள தாயார், அவரை மீட்டுத் தருமாறும், கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து ஒருவர் தொடர்பு கொண்டு காணாமல் போனவர் கஞ்சா கடத்தலிற்காக இந்தியா வந்தவேளை தவறியுள்ளார் எனத் தெரிவித்தார் எனவும், அன்றிலிருந்து அவரது தொலைபேசி செயற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## நீர்கொழும்பு துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர் உயிரிழந்தார்

நீர்கொழும்பு, துங்கல்பிட்டிய பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படு காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 25 வயதுடைய இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

துங்கல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லெல்லம பிரதேசத்தில்இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நபர் ஒருவரை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த நபர் நீர்கொழும்பு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிட்டிபன பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை துங்கல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை இவ்வருடத்தில் நிறைவடைந்த முதல் ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் நாட்டில் 40 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 23 பேர் உயிரிழந்துள்ளனர். 17 பேர் காயமடைந்துள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகம், பாதாளக் குழு செயற்பாடுகளில் ஈடுபடும் தரப்பினருக்கு இடையிலான முரண்பாடுகள் முதலியன துப்பாக்கிச் சூடு மற்றும் கொலை இடம்பெற வழி வகுக்கின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## திருமலை சீனன்வெளியில் மீனவரைக் காணவில்லை

(கனகராசா சரவணன்)



திருகோணமலை சீனன் வெளியிலிருந்து கடலுக்கு மீன்பிடிக்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என ஈச்சலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாட்டாளிபுரத்தைச் சேர்ந்த உதுமாலெப்பை முஸ்தபா என்ற மீனவரே காணாமல் போயுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைமாலை5மணிக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளார். இந்நிலையில், கடலுக்கு சென்றவர் நேற்றுப் பிற்பகல் வரை கரைக்குத் திரும்பவில்லை.

அவரின் கையடக்க கைப்பேசிக்கு தொடர்பு ஏற்படுத்தியபோதும் அது இயங்கவில்லை. அதனால் அவரது உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் லங்காபட்டுண கடற்படை முகாமில் முறையிடப்பட்டுள்ளபோதிலும் கடற்படையினரிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என்றும் தம்மிடம் தேடுதலுக்கான படகுகள் இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் தலையிட்டு குறித்த மீனவரை கண்டு பிடிக்க உதவ வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.08.2023




உத்தியோகம் பார்ப்பவர்கள் உயர்ந்த நிலையை அடைவீர்கள். பெண்களின் உதவியாளர் முக்கிய செயலை முடிப்பீர்கள். மூலதனத்துக்கு தேவையான பணம் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் வாக்குவாதங்கள் செய்யாதீர்கள். அலுவலகப் பணிகளின் அதிக சுமையால் இரவு பகல் பார்க்காமல் வேலை செய்வீர்கள். பிள்ளைகளின் கல்விக்காக செலவு செய்வீர்கள்.

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.




பழக்கத்தின் மூலமாக பணப் புழக்கத்தைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் இன்பச் சுற்றுலா செல்வீர்கள். புதிதாக வீடு, மனை வாங்குவீர்கள். பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடித்து தொழிலை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்வீர்கள். காதலி கேட்ட துணிமணியை வாங்கிக் கொடுத்து மகிழ்ச்சிப்படுத்துவீர்கள்.

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.




மரியாதை இழப்பீர்கள். வியாபாரத்தில் அதிக லாபம் பெற மாட்டீர்கள். பத்திரகாளியாக மாறும் மனைவியை மாற்ற முடியாமல் தடுமாறுவீர்கள். பணியின் காரணமாக மூச்சு திணறல் நோய்க்கு ஆளாவீர்கள். விபத்து ஏற்பட்டு சிறிய காயம் அடைவீர்கள்.

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். தலைசுற்றல் முழங்கால் வலி வந்து விலகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் மறைமுகப் பிரச்னைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.




வியாபாரப் போட்டியால் சின்ன நஷ்டம் அடைவீர்கள். தொழிலில் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் ஏற்படாமல் சுணக்க நிலையை காண்பீர்கள். கேட்ட இடத்தில் பணம் வர தாமதமாவதால் பிள்ளைகளின் படிப்பு செலவுக்காக கடன் வாங்குவீர்கள். வேலை இடத்தில் செய்யாத குற்றத்திற்காக குறை கூறப்படுவீர்கள். கைப் பொருள்களை பத்திரமாக வைத்திருக்க மறக்காதீர்கள்

கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.




நீண்ட நாள்களாக தள்ளிப்போன பதவி உயர்வை அடைவீர்கள். இதுவரை தொந்தரவு கொடுத்து வந்த நோய் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். இழுபறியாக இருந்த காரியங்களை உங்களுக்குச் சாதகமாக முடிக்க முயற்சி செய்வீர்கள். உபரி வருமானத்தில் பழைய பாக்கிகளை அடைப்பீர்கள். பிள்ளைகளின் கல்வித்திறனால் பெருமைப்படுவீர்கள்.

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.




பெரியவர்களின் ஆசியால் பல நல்ல காரியங்கள் செய்வீர்கள். அரசாங்கத்தின் மூலம் நல்ல காண்ட்ராக்ட்களை பெறுவீர்கள். உங்கள் நடத்தையால் செல்வாக்கை அதிகரிப்பீர்கள். பிள்ளைகள் மூலம் மன மகிழ்ச்சி அடைவீர்கள். வேலையிடத்தில் உற்சாகமாக இருப்பீர்கள். தொழிலுக்கு இடையூறாக இருந்த முட்டுக்கட்டைகளை தவிடு பொடியாக்குவீர்கள்.

தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.




உங்களை வீழ்த்த நினைத்த எதிரிகளின் எண்ணத்தை மன உறுதியால் வெற்றி பெறுவீர்கள். தொழிலுக்கு இருந்த போட்டிகளை கொஞ்சம் கொஞ்சமாக அகற்றுவீர்கள். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றத்தை காண்பீர்கள். நிலம் வாங்கி விற்கும் தொழிலில் அதிக வருமானம் பெற மாட்டீர்கள். பணவரவு செலவில் எச்சரிக்கையாக இல்லாவிட்டால் ஏமாற்றம் அடைவீர்கள்.

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவரின் நட்பால் ஆதாயம் அடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.




மூளைக்குள் திட்டம் தீட்டி வேலைக்கு வடிவம் கொடுப்பீர்கள். வெளியூர்ப் பயணங்கள் அவ்வளவு சிறப்பாக அமையாததால் உடல் சோர்வு அடைவீர்கள். அரசு வேலைகளில் சங்கடங்களை எதிர்நோக்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் தொய்வான நிலையை காண்பீர்கள். எதிலும் அகலக்கால் வைக்காதீர்கள். சந்திராஷ்டம நாள். நிதானம் தேவை.

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சில நேரங்களில் நன்றி மறந்த சிலரை நினைத்து வருத்தப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.08.2023

### தனுசு

ஏட்டிக்குப் போட்டியாக பேசிய இல்லத்தரசியை இணக்கமாக கொண்டு வருவீர்கள். பந்தயங்களில் லாபத்தை பெறுவீர்கள். ரியல் எஸ்டேட்டை அமோகமாக நடத்துவீர்கள். பங்குப் பரிவர்த்தனைகளை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வீர்கள். வேலை இடத்தில் நல்ல மதிப்பு பெறுவீர்கள். உற்சாகமான பேச்சால் உறவுகளை மேம்படுத்தி அனைவரையும் ஒன்று சேர்ப்பீர்கள்.

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். குடும்பத்தில் பிரச்னைகள் தீரும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

### கும்பம்

பணப்புழக்கம் இருந்தாலும் கை மீறி போகும் செலவால் கவலைப்படுவீர்கள். தேவையில்லாத சிந்தனையால் தூக்கம் கெடுவீர்கள். மனைவி மக்கள் உறுதுணையாக இருப்பதால் சற்று நிம்மதி அடைவீர்கள். நண்பர்களின் உதவியை தகுந்த நேரத்தில் பெறுவீர்கள். வியாபாரத்தை சரளமாக நடத்துவீர்கள். வியாபாரத்தில் ஏற்ற இறக்கமான லாபம் காண்பீர்கள்.

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

### மகரம்

இரும்பாக இருக்கும் மனத்தை கரும்பாக மாற்றுவீர்கள். வாக்கு சாதுர்யத்தால் வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். இடையில் ஏற்படும் சின்னத் தொல்லைகளைக் கிள்ளி எறிவீர்கள். ஆடம்பரமானவிழாக்களில்கலந்துகொள்வீர்கள். சுபநிகழ்ச்சிகளுக்கு செலவு செய்வீர்கள். விருந்தினர்களுக்கு வீட்டில் சுவை மிகுந்த உணவு கொடுத்து அன்பை வெளிப்படுத்துவீர்கள்.

சமயோசிதமாக சாதுர்யமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

### மீனம்

வீடு வாங்கி பெற்றோர்களின் ஆசையை பூர்த்தி செய்வீர்கள். புதிய தொழில்கள் தொடங்குவீர்கள். அரசுத் துறையில் அற்புதமாக வேலை செய்வீர்கள். தனியார் துறையில் முதலாளிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். முன்னேற்றமான பலனும் அடைவீர்கள். திருமண முயற்சிகளை சாதகமாக முடிப்பீர்கள். ஆன்மீகப் பணிகளில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.




